சார்பு நீதிமன்றம், ஆரணி, திருவண்ணாமலை மாவட்டம்

<u>**Case No. OS. 17/2012**</u>

2025ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 14ம் நாள் வெள்ளிக்கிழமை

வாதி தரப்பு சாட்சியாகிய வா.சா.1-இல் வாக்குமூலம் ஆக்ட் 10/1873-ம் ஆண்டின் ஏற்பாட்டின்படி திரு.வ.சிவக்குமார், எழுத்தர் நிலை 2 என்பவரால் பிரமாணம் செய்விக்கப்பட்டு, திறந்தவெளி நீதிமன்றத்தில் நீதிபதியின் முன்னிலையில், நேரடியான கவனத்திலும், கண்காணிப்பிலும் வாய்மொழி சாட்சியம் பதிவு செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | சுரேஷ் | தொழில் | கூலி வேலை |
| தந்தை பெயர் | எத்திராஜ் | ஜாதி | |
| கிராமம் | | சமயம் | |
| தாலுக்கா | விழுப்புரம் | வயது | |

<u>14.02.2025 முதல் விசாரணை</u>

நான் இவ்வழக்கின் வாதி ஆவேன். பிரதிவாதிக்கெதிராக வழக்கு தாக்கல் செய்துள்ளேன். வழக்கு பற்றிய முழு விவரம் எனக்குத் தெரியும். என் தரப்பு சாட்சியத்தை பிரமாண வாக்குமூலமாக தாக்கல் செய்துள்ளேன். பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியுள்ள விவரங்கள் அனைத்தும் உண்மைதான். என் தரப்பு சான்றாவணங்களாக, 14.02.1971 தேதியிட்ட சுரேஷ் பிறப்பு சான்று அசல் (பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் ஆட்சேபனையுடன்) **வா.சா.ஆ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது. 26.06.1992 தேதியிட்ட பாகப்பிரிவினை பத்திரம் சான்றிட்ட நகல் **வா.சா.ஆ.2** ஆக குறியீடு செய்யப்படுகிறது. 20.08.2008 தேதியிட்ட ஆவண எண்.8481/2008 கிரையப்பத்திரத்தின் சான்றிட்ட நகல் **வா.சா.ஆ.3** ஆக குறியீடு செய்யப்படுகிறது. 20.08.2008 தேதியிட்ட ஆவண எண்.8480/2008 கிரையப்பத்திரத்தின் சான்றிட்ட நகல் **வா.சா.ஆ.4** ஆக குறியீடு செய்யப்படுகிறது. 16.08.2011 தேதியிட்ட வழக்கறிஞர் அறிவிப்பு நகல் **வா.சா.ஆ.5** ஆக குறியீடு செய்யப்படுகிறது. 1ம் பிரதிவாதியின் அஞ்சலக ஒப்புகை அட்டை **வா.சா.ஆ.6** ஆக குறியீடு செய்யப்படுகிறது. 2ம் பிரதிவாதியின் அஞ்சலக ஒப்புகை அட்டை **வா.சா.ஆ.7** ஆக குறியீடு செய்யப்படுகிறது. 3ம் பிரதிவாதியின் அஞ்சலக ஒப்புகை அட்டை **வா.சா.ஆ.8** ஆக குறியீடு செய்யப்படுகிறது. 4ம் பிரதிவாதியின் அஞ்சலக ஒப்புகை அட்டை **வா.சா.ஆ.9** ஆக குறியீடு செய்யப்படுகிறது. 6ம் பிரதிவாதியின் அஞ்சலக ஒப்புகை அட்டை **வா.சா.ஆ.10** ஆக குறியீடு செய்யப்படுகிறது. 21.09.2011 தேதியிட்ட பதில் அறிவிப்பு **வா.சா.ஆ.11** ஆக குறியீடு செய்யப்படுகிறது. 29.11.2023 தேதியிட்ட தடைய அறிவியல் துறையின் டிஎன்ஏ அறிக்கை **நீ.ம.சா.ஆ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது. வழக்கில் கோரியுள்ளவாறு தீர்ப்பாக வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.